<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | சரவணன் | நாள் | 16.04.2024 |
| தகப்பனார் பெயர் | அப்புச்சி | | |

<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்று, தற்போது தனியார் நிறுவனத்தில் பாதுகாவலர் பணி செய்து வருகிறேன். தற்போது நான் வசித்து வரும் வீட்டின் கதவு எண் என்னவென்றால், க.எண்.61A–72A1 ஆகும். மேற்படி வீடு இந்திரா காலனியில் உள்ளது. வாதி சொத்தின் சர்வே எண், பிளாக் எண், வார்டு எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

2) வாதி எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், வாதி தனக்கு பாத்தியப்பட்ட 10X10 அடி அகல நிலத்தை வாதி செல்லம்மானின் கணவர் சுப்ரமணி என்பவர் பிரதிவாதி மணியரசுக்கு வாய்மொழியாக ஒப்பந்தம் செய்து, மேற்படி நிலத்தை கொடுத்துவிட்டு, என் வீட்டிற்கு பின்புறம் உள்ள 2X2 அடி அகலம் மற்றும் 25 அடி நீளமுள்ள சந்து பகுதியை வாதியின் கணவருக்கு கொடுத்துவிட்டார். மேற்படி சந்தின் வழியாகத்தான் வாதியின் மின்சார இணைப்புகளும், பைப் லைன்களும் சென்று வருகிறது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு பாதாள சாக்கடைக்காக தேவைப்பட்ட போது மேற்படி சந்தை பிரதிவாதி மணியரசு வாதி செல்லம்மாளுக்கு பாத்தியப்பட்டதல்ல என கூறி பிரச்சனை செய்து வருவதால், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) நான் 1986 ல் ராணுவத்தில் சேர்ந்து 2014 ம் வருடத்தில் ஓய்வு பெற்றேன். நான் இந்தியாவில் பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வந்தேன். வாதியின் கணவர் எப்போது இறந்தார் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. எப்போது நான் சொல்வது போல் வாதியும், பிரதிவாதியும் அவர்களது இடங்களை பரிமாற்றிக்கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், நேரடியாக தெரியாது. எப்போது பரிமாற்றிக்கொண்டனர் என்றால், சுமார் 30 வருடங்கள் இருக்கும். எனக்கும், பிரதிவாதிக்கும் சுமூக உறவு உள்ளதா என்றால், உள்ளது.

4) மேற்படி இடப்பரிமாற்றம் குறித்து, பிரதிவாதி என்னிடம் எப்போதாவது சொல்லியுள்ளாரா என்றால், இல்லை. பிரதிவாதியின் வீட்டிற்கு தென்புறத்தில் கிழமேலாக மதில்சுவர் உள்ளது என்றால், சரிதான். மேற்படி கிழமேல் சுவற்றை ஒட்டி தென்புறத்தில் நான் சொல்லும் சந்து அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி சந்தின் மேற்குபுறத்தில் கிழமேலாக செல்லும் பொன்னகர் ரோட்டிலிருந்து தென்வடலாக வீதி அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி வீதியிலிருந்து சந்திற்கு செல்வதற்கு பிரதிவாதி தன்னுடைய கிழமேல் மதில் சுவற்றின் தென்புறத்தில், மேற்குபுற நுழைவாயிலில் கதவு வைத்துள்ளார் என்றால், சரியல்ல. மேற்படி இடத்தில் சுமார் 1 அடி அகலத்திற்கு சுவர் வைத்துள்ளார். அதை ஒட்டி நான் அட்டை வைத்து தடுத்துள்ளேன்.

5) மேற்படி சந்திற்கு தெற்கு புறத்தில்தான் என்னுடைய வீடு உள்ளது என்றால், சரிதான். பிரதிவாதி தன் வீட்டிலிருந்து மேற்படி சந்திற்கு வருவதற்கு, மேற்படி கிழமேல் மதில்சுவற்றின் தெற்கு புறத்தில் ஒரு கதவு வைத்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி 2 அடி சந்தை தவிர வேறு காலி நிலம் எதுவும் இல்லை என்றால், சரிதான். ஆனால், என் வீட்டை ஒட்டி வடக்கு புறமாக நான் சுமார் 1 அடி அகலத்தில் காலி நிலம் விட்டுள்ளேன்.

6) வாதி செல்லம்மாள் என் வீட்டிற்கு கிழக்குபுறமும், வாதியின் வீட்டிற்கு மேற்கு புறமும், மதில்சுவர் வைத்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி மதில் சுவற்றிலிருந்து மேற்குபுறமாக உள்ள என் வீட்டிற்கு வருவதற்கு எவ்வித வழியும் இல்லை என்றால், சரிதான். தற்போது நான் வசித்து வரும் வீட்டை கட்டி எவ்வளவு நாட்கள் ஆகிறது என்றால், சுமார் 4 மாதங்கள் ஆகிறது. அதற்கு முன்பு ஓட்டு வீடாக இருந்தது. நான் வசித்து வரும் நிலத்தை என் தாயார் கடந்த 27.08.2014 ம் தேதியில் எனக்கு அளித்த தானசெட்டில்மெண்ட் படி பாத்தியப்பட்டது என்றால், சரிதான்.

7) என் தாயார் எனக்கு அளித்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கிழமேல் 30 அடியும், தென்வடல் 25 அடியும், ஆக மொத்தம் 750 சதுரடி அளவுள்ள நிலத்தையும்,

அதிலுள்ள ஓட்டு வீட்டையும் எனக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால், சரிதான். என் தாயார் எனக்கு அளித்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கிழபுற செக்குபந்தி விவரமாக வாதியின் நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். பொட்டியம்மாள் என்ற பெயர் வாதி செல்லம்மாளுடையது ஆகும். என்னுடைய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் என் வீட்டிற்கு வடக்கு புறமாக பிரதிவாதி மணியரசுவின் நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

8) நான் சொல்வதுபோல் என் வீட்டிற்கு வடக்கு புறம் வாதிக்கு சொந்தமான ஏதேனும் நிலம் இருந்திருந்தால், மேற்படி செக்குபந்தி விவரத்தில் அவருடைய நிலம் தான் காட்டப்பட்டிருக்கும் என்றால், சரியல்ல. மேற்படி என் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் என் சொத்திற்கு வடக்கு புறத்தில் செல்லம்மாள் பெயரிலுள்ள சொத்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். சிறிய பகுதியாக இருந்ததால், குறிப்பிடப்படவில்லை.

9) தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கிழமேலாக அமைக்கப்பட்டுள்ள, கான்கிரீட் பேஸ்மெண்ட் பகுதி பிரதிவாதியுடையது என்றால், சரியல்ல. மேற்படி பகுதியைத்தான் பிரதிவாதி வாதிக்கு கொடுத்துவிட்டார். மேற்படி பேஸ்மெண்ட் ஆனது, கிழக்கு புறத்தில் 2–1/2 அடி அகலத்திலும், மேற்கு புறத்தில் சுமார் 1–1/2 அடி அகலத்திலும் குறுகலாக இருக்குமென்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நான்காவதாக உள்ள புகைப்படத்தில் காணப்படும் என்னுடைய வீட்டு சுவற்றிற்கு வடக்கு புறத்தில் உள்ள சுமார் 2–1/2 அடி காலி நிலம் பிரதிவாதியுடையது என்றால், சரியல்ல. மேற்படி புகைப்படத்தில் காணப்பட்டுள்ளவாறுதான் அமைப்புகள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி புகைப்படம் மற்றும் அதன் குறுந்தகடுடன் **பி.வா.சா.ஆ.1 (Ex.B.1)** வாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

10) நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி என்னுடைய நிலத்திற்கு வடக்கு புறமாக எனக்கு எவ்வித காலிநிலமும் இல்லை என்றாலும், அங்கு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சுமார் 2–1/2 அடி அளவுள்ள காலி நிலம் உள்ளது என்றாலும் சரியல்ல.

11) நான் என்நிலத்திலுள்ள வில்லை வீட்டை மாற்றி தார்சு வீடு கட்டும் சமயத்தில் என் வீட்டிற்கு வடக்கு புறம் உள்ள காலி நிலம் தொடர்பாக பிரதிவாதி மணியரசுவிடம் சென்று, வாக்குவாதம் செய்தேன் என்றால், சரியல்ல. மேற்படி காலி நிலத்திற்கு செல்லும் பாதையை அடைத்திருந்தார்கள் அதனால், அவற்றை அகற்ற கோரி கேட்டேன்.

12) நான் சொல்வதுபோல் என் வீட்டிற்கு வடக்கு புறத்தில் எனக்கு 1 அடி அகலத்திலும், பிரதிவாதிக்கு 2 அடி அகலத்திலும் காலி நிலம் இருந்திருந்தால், மொத்தம் அங்கு 3 அடி நிலம் இருந்திருக்கும் என்றால், சற்று குறைவாக கூட இருக்கலாம். நான் சொல்வது தவறானது என்றாலும், வடக்கு புறத்தில் பிரதிவாதிக்கு மட்டுமே நிலம் உள்ளது என்றாலும், தற்போது வழக்கிற்காக எனக்கு அங்கு நிலம் உள்ளதாக நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

13) தற்போது என்னிடம் காட்டப்படும் அந்தியூர் தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் பாகம் எண்.166 ல் வரிசை எண்.15 ல் காட்டப்பட்டுள்ள வாக்காளர் பெயர் என்னுடையது என்றால் சரிதான். அதே வாக்காளர் பட்டியலில் 88 வது வரிசையில் காட்டப்பட்டுள்ள அருள்நாயகி என காட்டுப்பட்டுள்ள நபர் என்னுடைய மனைவி என்றாலும், அதே வாக்காளர் பட்டியலில் வரிசை எண்கள்.248, 249 ஆக காட்டப்பட்டுள்ள தீபிகா மற்றும் சந்தோஷ் ஆகியோர்கள் என்னுடைய மகன் மற்றும் மகள் என்றால், சரிதான். நான் மேற்படி தொகுதியில் சுமார் 15 ஆண்டுகளாக ஓட்டு செலுத்தி வருகிறேன்.

14) மேற்படி பகுதியானது, திருப்பூர் பாராளுமன்ற தொகுதி, அந்தியூர் சட்டமன்ற தொகுதி, கூத்தம்பூண்டி வடக்கு கிராமம் பகுதியை சார்ந்தது என்றால், சரிதான். அதேபோல் மேட்டூர் தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில், வரிசை எண்.546 ல் என்னுடைய பெயர் உள்ளது என்றால், சரிதான். ஆனால், கதவு எண் தவறாக உள்ளது. மேட்டூர் தொகுதியில் உள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து என் பெயரை நீக்கியுள்ளேனா என்றால், இல்லை.

15) நான் சொல்வது போல் வாதி, பிரதிவாதிக்கு எவ்வித நில பரிமாற்றமும் செய்யவில்லை என்றாலும், வழக்கு சங்கதிகள் குறித்து நேரடியாக தெரியாமல், வாதி கேட்டு கொண்டதால், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.